6th March 1958] [Sri S. Thangavelu]

காடாம்புலியூர், பண்ணுருட்டி, குள்ளஞ்சாவடி வட்டாரத்தில் மழை கிடையாது, அதனல் வசதிகள் குறைவாக இருக்கின்றன. தண்ணீர் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. கால்வாய் கிடையாது. பண்ருட்டிக்கு அடுத்தாற் போல் கெடிலம் நதி வருகிறது. அதில் பெரிய அணைக்கட்டு ஒன்றைக் கட்டினல் நீர்ப்பாசன வசதி கிடைக்கும். இதன் மூலம் கடலூர் பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கலாம். அந்த வசதியைச் செய்து கொடுத்தால் சர்க்காரை மிகவும் போற்றக் கூடியதாக இருக்கும். எனது நண்பர் ஒருவர் பேசும்போது தென்னுற்காடு ஜில்லாவில் தண்ணீர் இல்லாமல், அங்குள்ள பயிர் வாடிப்போனது என்று குறிப்பிட்டார். அதற்கு சர்க்கார் உதவி செய்யாததைப்பற்றி குறிப்பிட்டார். அவர் மற்றென்றைப்பற்றி சொல்ல விட்டுவிட்டார். சர்க்கார் விவசாயிகளுடைய குறைபாடுகளை நேரில் கவனித்து அதற்கு வேண்டிய வசதிகளையும் செய்து கொடுத்து வருகிருர்கள். அங்குள்ள விவசாயிகளின் பயிர்கள் வாடும் தருவாயில் இருந்தபோது அவைகளுக்கு தண்ணீர் விட வேண்டும் என்று எண்ணி நீர்ப்பாசனத்திற்காக சாத்தனூர் தேக்கத்திலிருந்து சுமார் பத்து அல்லது பதினேரு நாள் தண்ணீரை விட்டுக்கொடுத்தார்கள். அப்படிக் கொடுத்ததில் திருக்கோவிலூர், கடலூர் முதலிய வட்டாரங்களிலுள்ள விவசாயிகளின் பயிர்கள் வாடாமல் காப்பாற்றப்பட்டன. அப்படி அந்தப் பிரதேசங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்ததற்கு அங்குள்ள விவசாயிகள் வாழ்த்துகிருர்கள். வாடிக் கிடந்த பயிர்களுக்கு சர்க்கார் உயிர் கொடுத்ததற்கு சர்க்காரை அங்குள்ள விவசாயிகள் மிகவும் பாராட்டுகிருர்கள், போற்றுகிருர்கள், வாழ்த்துகிருர்கள்.

DEPUTY SPEAKER : தயவு செய்து ஒரு நிமிஷத்தில் முடித்துவிடுங்கள். 6 p.m.

SRI S. THANGAVELU : சர்க்கார் ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்காக கடந்த பட்ஜெட்டில் ஒதுக்கிய தொகையைவிட தற்சமயம் நாற்பது லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கியிருப்பதை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். பதினறுவது நூற்றாண்டில் நந்தனர் காலத்தில் ஹரிஜனங்கள் சிதம்பரம் நடராஜப் பெருமானுடைய கோயிலுக்குள் நுழையக் கூடாது என்று சொல்லிய மூட பழக்க வழக்கங்களை எதிர்க்கட்சிகள் சொல்லும் திராவிட நாடு இன்று மாறியிருக்கிறது. ஒரு காலத்தில் இந்த நாடு ஹரிஜனங்களைப் பொறுத்த வரையில் புறக்கணிக்கப்பட்டிருந்தது. ஹரிஜனங்களுக்காக நமது காங்கிரஸ் சர்க்கார் நல்லதொரு முறையில் கவனம் செலுத்தி, அவர்களுக்கென்றே ஒரு தனி இலாகாவை ஏற்படுத்தி, அல்லும் பகலும் ஹரிஜனங்களுக்குடைய முற்போக்குக்காக பாடுபட்டு வருவதை நண்பர்கள் மறக்கக்கூடாது. நான் இந்த நிதி நிலை அறிக்கையை முழு மனதுடன் வரவேற்று என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 1 p.m. to-morrow. 6–01 p.m.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory rules, orders and notifications:

67. *Notification issued with G.O. Ms. No. 4567, Revenue, dated 11th December 1957, exempting Co-operative Milk Supply Societies and Unions from payment of Sales-Tax under section 3 (i) of the Madras General Sales Tax Act, 1939, in respect of all Sales of Milk*

[6th March 1958

Products. [*Laid on the Table of the House under section* 19 (6) *of the Madras General Sales Tax Act,* 1939].

68. *Notification issued with G.O. Ms. No.* 308, *Revenue, dated* 27*th January* 1958, *modifying the notification exempting from sales tax the Co-operative Wholesale Stores and District Co-operatives Supply and Marketing Societies.* [*Laid on the Table of the House under section* 19 (6) *of the Madras General Sales Tax Act,* 1939].

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS